RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22139

OPEN ACCESS

# ஜெயகாந்தன் சிறுகதைகளில் அந்நியமாகிப் போகும் குழந்தைகளின் மனநிலைகள்

கெ. பெனடி [அ, *]

[அ] தமிழ்த்துறை, அரசு கலைக் கல்லூரி, திருவனந்தபுரம், இந்தியா

# Jayakanthan's Short Stories Alienating Children's Moods

K. Benady [a, *]

[a] Department of Tamil, Government Arts college, Thycaud, Thiruvananthapuram, Kerala-695014, India.

* Corresponding Author: benadyktamil@gmail.com

Received: 27-11-2021
Revised: 18-01-2022
Accepted: 23-01-2022
Published: 30-01-2022

Check for updates

## ABSTRACT

Primitive man lived in a social environment where there was no inequality, everyone worked together and shared everything. They always wanted to be connected to nature and society. They lived without being divided among themselves. They did not differentiate themselves from nature and society, but were interconnected. This did not alienate man from society. The class distinctions created by economic development and the promotion of private ownership and inequality by occupational divisions took over man. This led to inequalities, monopoly attitudes and authoritarian states among human beings. It can be assumed that human beings were alienated for human beings or alienated from each other for the reasons mentioned above. The purpose of this essay is to explain the alienation of children in Jayakanthan's short stories.

**Keywords:** Jayakanthan, Short stories, Society, Inequality

## முன்னுரை

அந்நியமாதல் என்பது மனிதவாழ்வின் அனைத்து நிலைகளிலும், அனைத்துச் சூழல்களிலும், ஏதாவதொரு காரணத்தால் மனிதன் தனிமைப்பட்டுப் போவதால் ஏற்படுகின்ற ஒரு உணர்வு எனலாம். போர், பூகம்பம், சுனாமி, பஞ்சம் போன்றவைகள் சமுதாயத்தில் ஊடுருவும்போது மனிதன் இயற்கை, உழைப்பு, இனம், குடும்பம், சமூகம் ஆகியவற்றிலிருந்து அந்நியமாகி போகும் சூழலுக்குத் தள்ளப்படுகின்றான்.

மனிதன் ஒரு தனியாள் என்ற வகையில் இயற்கையிடமிருந்தும், சமூகத்திடமிருந்தும் வேறுபடுகிறான். நான் அன்னியமானவன், முழுமையிலிருந்து பிரிக்கப்பட்டவன், தனியானவன் சபிக்கப்பட்டவன் என்பன போன்ற எண்ணங்கள் பல சூழல்களில் மனிதமனங்களில் ஏற்படக்கூடும்.

மனிதன் எவற்றையெல்லாம் படைத்தானோ அவைகள் எல்லாம் அவனை எதிர்த்து நசுக்கும் போது அவனது ஆற்றலிருந்தும் படைப்புகளிலிருந்தும் அவன் அந்நியமாகின்ற ஒரு சூழல் ஏற்படுகிறது. தான் சேர்ந்திருக்கிற சேர்ந்திருக்க வேண்டிய குழுவிலிருந்து, வெட்டிப்பிரிக்கப்படும் அவன், தன்னைத்தானே அந்நியமாக உணர்ந்து, அந்நியமாகும் சூழலுக்குத் தள்ளப்படுகிறான். இவ்வாறு அந்நியமாகிப்போகும் மனிதன் பிடிப்பற்றவனாகவும் வெறுப்புமிக்கவனாகவும் மாறுகிறான்.

## அந்நியமாதலின் காலம்

அந்நியமாதல் என்பதை ஒரு கோட்பாடாக முதன் முதலில் கூறியவர் மார்க்ஸ் ஆவார். மார்க்ஸ் பாரிசில் இருந்த பொழுது 1844 இல் அவர் எழுதிய பொருளாதார தத்துவபடிகள் என்ற நூலில் அந்நியமாதலைப்பற்றி குறிப்பிட்டுள்ளார். அதன் பின்னரே அந்நியமாதல் என்னும் தத்துவம் உலகிற்கு தெரிய வந்தது.

இது உலகம் முழுவதிலும் புதியதொரு பார்வையை ஏற்படுத்தியது 1960 களில் தமிழ்ச்சிந்தனையிலும் இத்தாக்கம் செயல்படுத்தொடங்கியது. 1960 சூலை முதல் 1969 மே வரை கோவையிலிருந்து வெளிவந்த "புதியதலைமுறை" என்னும் இதழ் "அந்நியமாதல்" தொடர்பான கட்டுரைகளை முதன் முதலில் தமிழ்ச் சூழலில் வெளியிட்டது. இவ்விதழில் எஸ். என். நாகராஜன் `ரமணன்` என்னும் பெயரில் அன்னியமாதல் கோட்பாட்டை அறிமுகப்படுத்தி எழுதியுள்ளார்.

எஸ்.என். நாகராஜன் அறிமுகப்படுத்திய அந்நியமாதல் கோட்பாட்டின் அடிப்படையில் ஞானி எஸ்.வி. ராஜதுரை, புலவர் ஆதி ஆகியோர்கள் பல்வேறு கட்டுரைகளை எழுதினர். 1979-ல் "அந்நியமாதல்" என்னும் பெயரில் அதன் தத்துவத் தளங்களைத் தெளிவுபடுத்தி எஸ். வி ராஜதுரை வெளியிட்டார்.

## தமிழ் இலக்கியத்தில் அந்நியமாதல்

வரலாற்றுச் சூழலே ஒரு தத்துவத்தின் தோற்றத்திற்குக் காரணமாக அமைகிறது. தேவைகளின் அடிப்படையிலேயே பல தத்துவங்கள் உலகில் தோன்றின இலக்கியத்திற்கும் தத்துவத்திற்கும் மிக நெருங்கிய தொடர்புண்டு இலக்கியத்தின் பெரும்பாலான கருத்துக்கள் தத்துவங்களின் தாக்கம் காரணமாகவே தோன்றின. மார்க்கியமும் அந்நியமாதலும் உலக அளவில் சமகால இலக்கியத்தை வெவ்வேறு அளவில் பாதித்துள்ளன அந்நியமாதல் தமிழ் இலக்கியத்தில் பெருமளவில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை. இலக்கியம் மனிதனின் வாழ்க்கையை மொழி வாயிலாக வெளிப்படுத்துகிறது மனித வாழ்வின் உண்மை பொருளை குறித்த தேடல்தான் இலக்கியத்தின் முக்கிய நோக்கம்.

தத்துவ அறிஞர் `ராம்பிரகாஷ்` அவர்கள் "உலகம் மற்றும் மனிதனின் இருப்பிற்கான அர்த்தத்தை ஆராய்ந்து தெரிவிக்கும் கோட்பாடு தத்துவமாகும்" என்று தத்துவத்திற்கு விளக்கம் அளிக்கிறார் (Ram Prakash, 2020). மனிதன் சில வேலைகளில் தனக்குத்தானே முரண்பட்டு வாழவேண்டியக் கட்டாயத்திற்கு ஆளாகிறான். வாழ்வின் தொடர்ச்சியில் மனிதனுக்கும் அறிவுக்கும் எப்பொழுதும் போராட்டம் நிகழ்வகிறது. தன்குடும்பம், சுற்றம், உலக மக்கள் போன்றவர்களோடு தன் வாழ்க்கையின் உரிமைக்காக போராடுகிறான் இதனால் மன அழுத்தத்திற்கு ஆளாகி மன அமைதியையும் இழக்கிறான்.

மனிதனின் உண்மைநிலை, உலகத்தைப்பற்றிய உண்மைகள் இவற்றை புரிந்து கொண்டால் எதையும் நினைத்து கலங்கவோ, போராடவோ வேண்டிய தேவை இல்லை என்று தத்துவங்கள் மனித வாழ்விற்கான உண்மை விளக்கத்தைத் தருகின்றன.

மனிதனின் வாழ்க்கை ஒரு விதத்தில் தத்துவங்களின் அடிப்படையில் இயங்குகிறது என்று கூறலாம். இலக்கியம் உணர்த்தும் வாழ்க்கை உடல் என்றால், அந்த வாழ்க்கையினுள்ளே இலக்கியத்திற்கு உயிராக விளங்குகிறது. இதனால் தான் `ஆல்பார்ட்காமு` என்பவர் "நீ தத்துவவாதியாக இருக்க விரும்புகிறாயா? நாவல் எழுது" என்றார். இவரது கூற்று நாவல் போன்ற இலக்கியங்களில் தத்துவங்கள் தாமாகவே புரிந்துவிடுகின்றன என்பதை உணர்த்துகின்றது. மனிதனைச் சுற்றி நிகழ்கின்ற நிகழ்ச்சிகள் முழுவதையும் அறிந்து கொள்ளும் ஆற்றலுடைய ஒருவன் இந்த இலட்சியங்களையும், தத்துவங்களையும் ஆராய்ந்து அறிந்துவிடுகிறான்.

தனிமனிதன் தன்னம்பிக்கை அனுபவம் போன்றவற்றைக் கொண்டு ஒரு பிரச்சினையை அணுகுகிறான் ஒரு பிரச்சினையைப் பல கோணத்தில் பலவித அணுகு முறையில் ஆராய்ந்து உண்மையை காண்பதற்கு தத்துவம் உதவுகிறது.

ஒவ்வொரு காலகட்டத்திலும் குறிப்பிட்ட ஒரு தத்துவம் செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்துள்ளது.அந்த காலகட்டத்தில் தோன்றும் இலக்கியம் அத்தத்துவத்தைச் சார்ந்து வெளிப்படுகிறது.தமிழ் இலக்கியமரபு இதற்கு தெளிவாக சான்று பகர்கிறது.

## கதை இலக்கியமும் அந்நியமாதலும்

அந்நியமாதல்தத்துவம் கதை இலக்கியத்தில் அறுபதியிலிருந்து வெளியான தமிழ்ப் படைப்புகளில் துவக்கம் பெறுகிறது நாவலில் சிறுகதைகளில் வரும் பாத்திரங்கள் தங்களுக்கு ஏற்படும் பொருளாதார சிக்கல்கள் வாழ்வின் அவலம் போன்ற காரணங்களால் அந்நியமாகின்றனர் மனித வாழ்வு பொருளற்றதாக வீரியமற்றதாக ஆனபோது மனிதன் தன் கற்பனையில் வாழ முற்படுகிறான் இதனை நாவல் ஆசிரியர்கள்.

மனிதன் எவ்வாறு சமுதாயத்தில் இருந்து அன்னியமாகி போகிறான் அதற்கான காரணங்கள் அந்நியமாகிப் போகும் மனிதனின் மனநிலை அவனின் பார்வையில் சமூகம் பற்றிய மதிப்பீடு அவற்றின் மீதான சமூக மதிப்பு எனத் தங்கள் நாவல்களில் விவரிக்கின்றனர். தமிழ் சிறுகதைகளிலும் அந்நியமாதல் தத்துவம் இடம்பெறுவதை காணலாம் வாழ்வில் அன்னியமாகிப் போன மனிதர்களின் நிலையைச் சிறுகதைகள் படம் பிடித்து காட்டுகின்றன. விடுதலைக்குப் பின் தோன்றிய சிறுகதைகளில் அந்நியமாதல் தத்துவத்தின் தாக்கத்தை இனங்காண முடிகிறது.

ஆய்வுக்கு உட்பட்ட சிறுகதை ஆசிரியரான ஜெயகாந்தன் சிறுகதையில் அன்னியமாதல் என்ற தத்துவம் குழந்தைகளின் மனதில் ஊடுருவி எத்தகைய பாதிப்பை ஏற்படுத்துகிறது என்பதை வெளிப்படுத்துவதை இக்கட்டுரையின் நோக்கமாகக் கொள்ளப்படுகிறது ஜெயகாந்தன் சிறுகதைகளில் அந்நியமாதல்

சமூகத்தின் அடித்தட்டு மக்களான ஏழை எளியவர்களின் வாழ்வையே படம் பிடித்துக் காட்டும் சிறுகதைகள் பலவற்றை ஜெயகாந்தன் படித்துள்ளார் அவரது சிறுகதைகளில் முச்சந்தி எனும் கதையில் பல்வேறு வாழ்க்கைச் சிக்கல்கள் காரணமாகச் சமூகத்திலிருந்தும் குடும்பஉறவுகளிலிருந்தும் தன்னிடமிருந்தும் கூட மனிதர்கள் அந்நியமாவதைக் காண முடிகிறது.

வறுமை மிகக் கொடியது பொருளாதாரத்தில் வளரும் நாடாகிய இந்தியாவில் வறுமையின் கோரப் பிடியினை ஊர்கள் தோறும், தெருக்கள்தோறும், வீடுகள்தோறும் காணலாம் வறுமையால் குடும்ப உறவுகள் சின்னா பின்னமாகிப் போவதையும் வறுமையால் காணலாம். பெரியவர்கள் கூட பெரும் துன்பத்திற்கு ஆளாகின்றனர். அவ்வாறிருக்க குழந்தைகள் படும் துன்பம் பற்றி கூற வேண்டியதில்லை

இவ்வறுமையினால் குழந்தைகள் பெற்றோர்களாலேயே சுமையாகவும் துன்பமாகவும் கருதப்படுவதும் அதனால் குழந்தைகளிடம் பாசம் காட்ட முடியாமல் வெறுப்புடனும் அல்லது வெறுப்பில்லாமலும் பெற்றோர்கள் நடந்து கொள்கின்றனர் பெற்றோரின் பாசம் கிடைக்காததால் குழந்தைகள் பெற்றோரிடமிருந்து விடுபட்டு மனநலம் குன்றி ஒரு அந்நிய மனநிலைக்கு தள்ளப்படுகின்றனர் இவ்வாறு வறுமையில் அந்நியமாகிப் போன குழந்தைகள் பற்றிய சித்தரிப்பும் ஜெயகாந்தன் சிறுகதைகளில் இடம் பெற்றுள்ளதைக் காண முடிகிறது.

ஜெயகாந்தன் தமது முச்சந்தி என்னும் சிறுகதையில் பெற்ற தாயான குஞ்சம்மாளின் பொறுப்பற்ற தன்மை குடும்ப வறுமை போன்றவற்றால் சமூகத்திடமிருந்து அந்நியமாகி பிச்சை எடுத்து பிச்சைக்காரர்கள் என்னும் அடையாளத்தை ஏற்கும் சிறுவர்களைப் படம் பிடித்துக்காட்டுகிறார். தாயின் கோபத்திற்கு பயந்து பிச்சை எடுக்கப் போகும் கனகசபை

கன்னியப்பன் என்னும் சிறுவர்கள் தாயிடமிருக்கும் பயத்தால் தாயிடமிருந்து அந்நியமாகும் நிலையே இக்கதை சித்தரிக்கிறது.

பசியாலும் வறுமையாலும் பிச்சை எடுக்கத் துணிந்த குழந்தையை அடித்துத்திருத்தும் மனநிலையை கொண்ட நரசம்மாள் என்னும் ஒரு பொறுப்புள்ள தாயே இக்கதையில் காணலாம் இவரின் இச்செயல் ஒன்றுமேஇல்லாத குஞ்சம்மாளையும் எல்லாம் இருந்தும் பிச்சையெடுத்துப் பிழைக்கும் கிருஷ்ணயரையும் மனம் திருந்தச் செய்துவிடுகிறது.

அதன் மூலம் தன்னுடைய பொறுப்பற்ற தன்மையை உணரும் குஞ்சம்மாள் தனது குழந்தையை அணைத்து எடுத்து குழந்தை என்னும் உறவை அன்யோன்யமாகக் கருதி அந்நியமாகிப் போன குழந்தைகளை அரவணைத்து பாசம் காட்டும் தாயாக மாறுவதை காணலாம் ஆனால் இந்த அன்பின் அரவணைப்பு இல்லாமையால் குழந்தைகள் சமூகத்தில் அந்நியமாகிவிடும் நிலையை கதையின் மூலம் மறைமுகமாக உணர்த்துகிறார்.

ஜெயகாந்தனின் இன்னொரு கதையான கண்ணன் பிறந்தான் என்னும் சிறுகதை தந்தையின் பொறுப்பற்ற தன்மையால் குழந்தைகள் அந்நியமாகிப் போவதையும் பல்வேறு துன்பத்திற்கு ஆளாகி ஊரை விட்டு ஓடும் அவலநிலைக்கு ஆளாவதையும் காட்டுகிறது. இக்கதையில் கண்ணன் என்னும் சிறுவன் கடவுள் பக்தி என்று அலையும் தந்தையால் தனக்கு சாப்பாடு கூட போட முடியாமல் போவதால் திருடித்தின்னும் நிலைக்கு ஆளாகிறான் இதனால் தந்தை யிடம் அடி வாங்குகிறான். அதே போல் கடவுளை நிந்திப்பதினால் தனது அக்காவிடம் அடி வாங்குகிறான். வறுமை துன்பத்தால் தந்தை சகோதரி போன்றவர்கள் தன்னை அந்நியமாகப் பார்ப்பதாக உணரும் கண்ணன் அவர்களை வெறுத்துத் தானும் அவரிடமிருந்து அந்நியமாகி ஊரை விட்டு ஓடிப் போகிறான்

கடவுளிடம் மிகையான பக்தியைச் செலுத்தியும் தங்கள் குடும்பத்தின் பசியை இறைவனால் போக்க முடியவில்லை என்பதால் கடவுள் நம்பிக்கையிலிருந்தும் சிறுவன் அந்நியமாகிப் போகிறான். பொருளாதாரச் சீர்குலைவு வறுமை இவைகளை பெரும்பாலும் மனிதர்கள் சிறார்கள் என அனைவரும் அந்நியமாகிப்போகக் காரணமாக அமைகிறது என்பதனை கண்ணன் பிறந்தால் கதை சித்தரிக்கிறது. ஜெயகாந்தனின் ஒரு பிடி சோறு என்னும் சிறுகதை வறுமையால் ஏற்படும் சூழ்நிலை மாற்றங்களால் குழந்தைகளின் வாழ்வு தடம் மாறிப் போவதை உணர்த்துகிறது. மண்ணாங்கட்டி என்னும் சிறுவன் வறுமையால் திருடி தின்னும் மனநிலைக்கு ஆளாவதையும் அதனால் அவனுக்கு குற்றவுணர்வோ அதுதவறென்னும் மனநிலையோ, எண்ணமனைத்தும் உணவு என்னும் ஒன்றிலேயே குவிந்து இருப்பதையும் இக்கதையில் காணலாம். இக்கதையில் அன்னையைப் பிரிந்து மகனும் மகனைப் பிரிந்து அன்னையும் அன்னியமாகிப்போகும் வாழ்க்கைச் சூழலைக் காணமுடிகிறது. பசியின் முன் பாசம் தோற்பதும் கோபத்தின் முன் பாசம் மறைந்து கொள்வதும் இங்கு உணர முடிகிறது. இறக்கும் தருவாயில் வெறுப்பு கோபம் போன்ற மனத்தின் தேவையற்ற குணங்கள் அனைத்தும் மறைந்து பாசம் மட்டும் மேலோங்கி நிற்கும் ஒரு சராசரி மனித மனநிலையையும் ஆசிரியர் சித்தரித்துக் காட்டுகிறார்.

"முடியாது என் கையிலே ஒனக்கு ஒரு பிடி சோறு போட மாட்டேன் எங்கேயாவது ஒழிஞ்சி போ மூஞ்சியிலே முழிக்காதே என்று ராக்ஷிஸி போல் கத்தினாள். உம் உம் பசிக்குதம்மா கஞ்சி குடும்மா ஐய யம்மா என்று முரண்டினான் மண்ணாங்கட்டி நீ என்ன பண்ணாலும் சரி ஒனக்கு ஒன்னும் தர முடியாது போ திருட்டு மூதேவி எங்கேயாவது போயித் திருடி துன்னுடா போ" என்ற காட்சி தாயிடம் இருந்தும் குடும்பத்தில் இருந்தும் ஒரு சிறுவன் அந்நியமாவதை சித்தரிக்கிறது (Jeyakanthan, 2018).

அதோடு மண்ணாங்கட்டி சிறுவன் தனது தாய் இறந்த பின் அனைத்தையும் துறந்து சுடுகாட்டிற்குச் செல்லுவதன் துறவு நிலையை அதாவது தான் யாரும் அற்றவன் என்னும் ஒரு பரிதாப நிலையையும் சுட்டுவதாக கொள்ளலாம் தன்னிடமிருந்து தான் அன்னியமாகி வாழ்வின் ஏமாற்றங்களால் அலைக்கழிக்கப்படுகிறான் இது போன்ற மனநிலை குழந்தைகளுக்கு ஏற்படுவது உறவுகளின் இழப்பு வறுமை துன்பம் போன்றவற்றால் தான் என்பதையும் காணலாம்

பொம்மை சிறுகதையில் பணக்காரக் குழந்தையான ராணியின் நடத்தை விளையாடும் விதம் போன்றவைகளை பார்த்து ஏழைக் குழந்தையான சிவகாமி தனக்கும் அதைப் போன்ற பொம்மை வேண்டும் என்று விரும்பி தனது தாயிடம் கேட்டு அடம்பிடிப்பதை இக்கதையில் காண்கிறோம்

குழந்தையின் ஆசையை நிறைவேற்ற முடியாமல் போகும் தாயிடம் இருந்து குழந்தை சிவகாமி அன்னியமாகி போவதோடு தவறான செயல்களை அறியாமலே செய்யும் மனநிலைக்குத் தள்ளப்படுவதையும் காணலாம் குழந்தை எடுக்கும் இம்முடிவு அறியாமையின்பாற்பட்டதே எனினும் அவ்வறியாமைக்கும் வறுமையை காரணமாய் அமைவதை இக்கதையின் மூலம் உணர முடிகிறது. மேலும் வறுமையால் பணக்கார வீட்டு பிள்ளை ராணியிடமிருந்தும் ஏழைக் குழந்தை அந்நியமாகி போகும் சூழலையும் இக்கதை விவரிக்கிறது.

## விளையாட்டு பொம்மை பற்றிய உரையாடல்

உன் பொம்மை எங்கே என்றால் ராணி எனக்குப் பொம்மையிலே தம்பிப் பாப்பா தான் அவனோடு தான் நான் விளையாடனுமாம் என்றாள் சிவகாமி" என வெளிப்படுத்துகிறது . அதோடு தனக்கு விளையாட ஒரு பொம்மை இல்லாத ஏக்கத்தால் தன் தம்பியை ஒரு பொம்மையாகி கருதி நோய்வாய்ப்பட்ட அக்குழந்தையின் தலையில் தண்ணீரை ஊற்றி குளிப்பாட்டி அதன் சாவுக்கும் காரணமாகிறாள். சிவகாமி என்னும் குழந்தையின் அறியாமையை மட்டும் காட்டுவதோடு வறுமை என்பது குழந்தைகளை எந்த ஒரு சூழலுக்கும் கொண்டு செல்லும் என்பதையும் காட்டுகிறது மேலும் இக்கதை தாயிடமிடருந்தும் சகவயதுக் குழந்தையிடமிருந்தும் அன்னியமாகிப் போகும் ஒரு சிறுமையின் செயல்களை சித்தரித்துக் காட்டுகிறது.

பொருளாதாரப் பிரச்சினையால் உளவியல் பூர்வமாக பாதிப்புக்குள்ளாகின்றனர் அதோடு தவறான அணுகுமுறைகளுக்கும் ஆளாகின்றனர் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளால் குழந்தைகள் எவ்வாறு அந்நியமாகி போகிறார்கள் என ஆராயப்படுகிறது. ஜெயகாந்தனின் மீனாட்சிராஜ்யம் என்னும் சிறுகதை பிச்சைக்காரியான மீனாட்சி நிலையையும் வளர்த்த கன்னிப் பெண்ணான மீனாட்சி நிலையையும் வயதுபோன கிழவி மீனாட்சி நிலையையும் மூன்று பகுதிகளாக பகுத்து பார்வையில் விளக்குகிறது.

பிச்சைக்காரி என்னும் ஒரு காரணத்தால் குழந்தை மீனாட்சி ஊரே அந்நியமாகக் கருதி ஒதுக்குவதையும் பருவவயதை அடைந்தவுடன் அதே பிச்சைக்காரி மீனாட்சியைப் பாசத்தோடும் காமத்தோடு பார்ப்பதையும் இக்கதையில் காணலாம் அத்தோடு வயதான பின்பும் தேவைக்கேற்ப ஏற்றுக்கொள்ளும் சமநிலையையும் இக்கதையின் வாயிலாக காண முடிகிறது.

மனிதர்கள் அன்னோன்யமாக பார்க்கப்படுவதும் அன்னியமாக பார்க்கப்படுவதும் அவர்களால் தமக்கு கிடைக்கும் பலன்களை வைத்தே என்பதை இக்கதை உணர்த்துகிறது மேலும் தனது பொறுப்பற்ற தன்மையால் தனக்கு பிறந்த எட்டு குழந்தைகளையும் பிச்சை எடுக்க விட்டு பணம் சம்பாதித்து உண்ணும் மீனாட்சி என்னும் ஒரு தாயையும் இக்கதையில் காணலாம். மீனாட்சி பொறுப்பற்ற தன்மை குழந்தைகள் வாழ்வை அல்லது உயிரை பொருளாக பார்க்கும் நிலையை ஆசிரியரின் அவள் குழந்தை இருந்தாலும் ஏதோ சில காசுகள் "அவள் குழந்தை இறந்தாலும் ஏதோ சில காசுகள்" என்னும் கூற்று நினைவுறுத்துவதைக் காணலாம் (Jeyakanthan, 2018).

இவ்வாறு சமூகம் தனது காமப் பசியைத் தீர்ப்பதற்காக மீனாட்சியைப் பயன்படுத்துவதையும் மீனாட்சி பொருளுக்காக அவர்களை பயன்படுத்துவதையும் அவர்களது பொருளியல் தேவையை பெற்ற குழந்தைகளை அந்நிய பொருளாகக் கருதும் மனோபாவத்திற்குத் தள்ளுவதையும் இக்கதை வாயிலாக உணரலாம். இங்கே பொருளாதார நிலையை அவளை பொறுப்பற்ற தாயாகவும் குழந்தையை அந்நியமாகக் கருதி பொருளுக்காகப் பயன்படுத்தும் நிலைக்கு கொண்டு செல்கிறது

என்றும் உணரலாம். இதுபோன்ற காரணங்களால் குழந்தைகள் அந்நியமாக பார்க்கப்பட்டு அந்நியமாகி போகும் நிலையை இக்கதை சித்தரிக்கிறது.

## முடிவுரை

சிறுகதை ஆசிரியர்களிடம் மனித உறவுகள் பற்றிய மேலான உணர்வுகள் காணப்படுகின்றன மேலும் இக்குழந்தைகள் கிராம சூழலிலும் நகரச் சூழலிலும் வாழ்கின்றனர் அவர்களுக்கு ஏற்படும் வறுமை பெற்றோரின் நடத்தைகக் குறைபாடுகள் குடும்ப ஒற்றுமையின்மை போன்ற காரணங்களால் இவர்கள் கிராமச் சூழ்நிலைகளிலிருந்தும், பெற்றோரிடமிருந்தும், சக நண்பர்களிடமிருந்தும் அந்நியமாகி போகும் நிலை ஏற்படுகிறது. நகரச் சூழலில் வாழ்கின்ற குழந்தைகளுக்கு ஒடுக்கப்பட்ட வாழ்க்கை மனநிறைவைத் தரவில்லை நாங்கள் தனிமையானவர்கள் என்ற உணர்வுடன் வாழ நேரிடுகின்றது இவர்களின் அடிப்படை சிக்கல் பொருளாதாரமாகும் மேலும் இவர்கள் பெற்றோர்களின் அதீதக்ககட்டுப்பாட்டினாலும் குழந்தையின் மனவுணர்வைப் புரிந்து கொள்ளாமையிலும் அந்நியமாவதற்கு இவை காரணங்களாகின்றன.

## References

Jeyakanthan (2018) Jeyakanthan Sirukathaigal, Kavitha Publication, Chennai, India

Ram Prakash (2020) Indhumatham oor arputham, Ezhuthu Pirasuram, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License